Click Here to Learn more : https://bit.ly/3Bh1AVg

# கணிதவியல்

- ★ மீப்பெரு பொது வகுத்தி மற்றும் மீச்சிறு பொது மடங்கு (HCF and LCM)
- ★ விகிதம், விகித சமம், நேர் விகிதம் (Ratio, Proportion and Direct Variation)
- ★ கால அளவைகள் (Measures of Time)
- ★ நேர்மாறல் எதிர்மாறல் (Chain Rule)
- ★ அளவையியல் (Mensuration)
- ★ இயற்கணிதம் (Algebra)
- ★ இலாபம் மற்றும் நஷ்டம் (Profit and Loss)
- ★ சதவீதம் (Percentage)
- ★ தனிவட்டி (Simple Interest)
- ★ கூட்டுவட்டி (Compound Interest)
- ★ எண்ணியல் (Numeracy)
- ★ சுருக்குதல் (Simplification)
- ★ காலம் மற்றும் வேலை (Time and Work)
- ★ காலம், தூரம் மற்றும் வேகம் (Time, Distance and Speed)
- ★ வயது கணக்கீடுகள் (Problems on Age)
- ★ கணவியல் (Theory of Sets)
- ★ அணிகள் (Matrix)
- ★ புள்ளியியல் (Statistics)
- ★ கூட்டுத் தொடர் மற்றும் பெருக்குத் தொடர் (Arithmetic and geometric progressions)
- ★ வடிவியல் (Geometry)
- ★ நிகழ்தகவு (Probability)
- ★ தரவு விளக்கம் (Data Interpretation)
- ★ அடிமான முறை (Base Numeral System)

www.surabooks.com

Click Here to Learn more : https://bit.ly/3Bh1AVg

Click Here to Learn more : https://bit.ly/3Bh1AVg

# 1 மீப்பெரு பொது வகுத்தி மற்றும் மீச்சிறு பொது மடங்கு (HCF AND LCM)

**1. 36 லிட்டர், 48 லிட்டர் மற்றும் 60 லிட்டர் கொள்ளளவு கொண்ட மீப்பாய்களில் உள்ளவற்றை காலியாக்க தேவைப்படும் மிகப்பெரிய கொள்ளளவு கொண்ட மீப்பாய் ஒவ்வொன்றையும் எத்தனை முறை காலியாக்கும் ?**

A) 11 லிட்டர் B) 12 லிட்டர்
C) 13 லிட்டர் D) 14 லிட்டர்

**விளக்கம் :** **விடை : (B)**

மிகப்பெரிய கொள்ளளவு கொண்ட மீப்பாயைக் காண 36, 48, 60 ஆகிய மூன்று எண்களுக்கு மீப்பெரு பொது வகுத்தியைக் காணவேண்டும்.

| | |
|---|---|
| 2 | 36, 48, 60 |
| 2 | 18, 24, 30 |
| 3 | 9, 12, 15 |
| | 3, 4, 5 |

$\Rightarrow 2\times2\times3 = 12$

**2. மருந்து விற்பனைப் பிரதிநிதிகள் மூவர் ஒரு மருத்துவரை குறிப்பிட்ட நாளில் சந்திக்கிறார்கள். பின்னர் முதல் பிரதிநிதி 10 நாள்களுக்கு ஒரு முறையும், இரண்டாவது பிரதிநிதி 15 நாள்களுக்கு ஒரு முறையும், மூன்றாவது பிரதிநிதி 20 நாள்களுக்கு ஒரு முறையும் தொடர்ந்து மருத்துவரைச் சந்திக்கின்றனர். எனில், மூவரும் மருத்துவரை எப்பொழுது ஒன்றாக சந்திப்பார்கள் ?**

A) 40 நாள்கள் B) 60 நாள்கள்
C) 65 நாள்கள் D) 48 நாள்கள்

**விளக்கம் :** **விடை : (B)**

மூன்றுபேரும் மருத்துவரை ஒரே நாளில் சந்திக்கத் தேவைப்படும் மிகக் குறைந்த கால அளவு காண 10, 15, 20 – மீச்சிறு பொது மடங்கு காணவேண்டும்.

10, 15, 20 - இன் பொது மடங்குகள் = 60, 120

10, 15, 20 - இன் மீச்சிறு பொதுமடங்கு = 60

**3. கீழ்க்கண்ட இணைகளில் எது சார்பகா எண்கள் அல்ல ?**

A) (13, 17) B) (7, 21)
C) (101, 201) D) (12, 13)

**விளக்கம் :** **விடை : (B)**

13, 17, – இன் மீப்பெரு பொ.வ - 1
101, 201 – இன் மீப்பெரு பொ.வ - 1
12, 13 – இன் மீப்பெரு பொ.வ - 1
7, 21 – இன் மீப்பெரு பொ.வ - 7
எனவே 7, 21 சார்பகா எண்கள் அல்ல

**4. 36, 156 என்ற இரு எண்களின் மீப்பெரு பொ.வ 12 எனில் அவற்றின் மீச்சிறு பொ.ம. காண்க.**

A) 420 B) 438
C) 468 D) 470

**விளக்கம் :** **விடை : (C)**

$$\text{மீச்சிறு பொ.ம.} = \frac{\text{இரு எண்களின் பெருக்கற்பலன்}}{\text{மீப்பெரு.பொ.வ.}}$$

$$\Rightarrow \frac{36\times156}{12} = 468$$

**5. இரு எண்களின் மீப்பெரு பொ.வ. 3, மீச்சிறு பொ.ம. 72. ஒரு எண் 24 எனில், மற்றொரு எண்ணைக் காண்க.**

A) 9 B) 12
C) 48 D) 52

**விளக்கம் :** **விடை : (A)**

மற்றொரு எண்

$$= \frac{\text{மீப்பெரு பொ.வ.} \times \text{மீச்சிறு பொ.ம.}}{\text{ஒரு எண்}} \Rightarrow \frac{3\times72}{24} = 9$$

**6. புஷ்பா 75 கி.கி, 60 கி.கி எடையுள்ள இரண்டு அரிசி மூட்டைகளை வாங்குகிறார். இம்மூட்டைகளில் உள்ள அரிசியைத் தனித்தனியாக சம எடையுள்ள பைகளில் நிரப்ப வேண்டுமெனில் ஒரு பையின் அதிகபட்ச எடை எவ்வளவு இருக்கலாம் ?**

A) 12 கி.கி B) 13 கி.கி
C) 14 கி.கி D) 15 கி.கி

**விளக்கம் :** **விடை : (D)**

மீப்பெரு பொது வகுத்தி காணவேண்டும்.

| | |
|---|---|
| 5 | 75, 60 |
| 3 | 15, 12 |
| | 5, 4 |

$\Rightarrow 5 \times 3 = 15$

**7. ஓர் அறையின் நீளம், அகலம் மற்றும் உயரங்கள் முறையே 825 செ.மீ, 675 செ.மீ, மற்றும் 450 செ.மீ எனில், மூன்று அளவுகளையும் சரியாக அளக்கத் தேவைப்படும் அளவு நாடாவின் அதிகபட்ச நீளம்**

A) 25 செ.மீ B) 50 செ.மீ
C) 75 செ.மீ D) 100 செ.மீ

**விளக்கம் :** **விடை : (C)**

மீப்பெரு பொது வகுத்தி காணவேண்டும்

| | |
|---|---|
| 5 | 825, 675, 450 |
| 5 | 165, 135, 90 |
| 3 | 33, 27, 18 |
| | 11, 3, 2 |

$\Rightarrow 5 \times 5 \times 3 = 75$ செ.மீ

**8. 6, 8, 12 ஆகிய எண்களால் மிகச்சரியாக வகுபடக் கூடிய மிகச் சிறிய ஈரிலக்க எண் எது ?**

A) 22 B) 23
C) 24 D) 25

**விளக்கம் :** **விடை : (C)**

| | |
|---|---|
| 2 | 6, 8, 12 |
| 2 | 3, 4, 6 |
| 2 | 3, 2, 3 |
| 3 | 3, 1, 3 |
| | 1, 1, 1 |

$\Rightarrow 2 \times 2 \times 2 \times 3 = 24$



Click Here to Learn more : https://bit.ly/3Bh1AVg

Click Here to Learn more : https://bit.ly/3Bh1AVg



9. வெவ்வேறு சாலைகள் சந்திக்கும் மூன்று இடங்களில் சாலை பாதுகாப்பு விளக்கு வைக்கப்பட்டுள்ளன. அவை ஒவ்வொன்றும் 48 விநாடிகள் 72 விநாடிகள், 108 விநாடிகளில் முறையே மாற்றமடைகின்றன. இவை மூன்றும் காலை 8 மணிக்கு ஒரே நேரத்தில் மாற்றமடைகின்றன. திரும்பவும் அவை மூன்றும் எப்பொழுது ஒரே நேரத்தில் மாற்றமடையும் ?

A) 8 மணி 7 நிமிடம் 12 நொடி
B) 7 மணி 8 நிமிடம் 12 நொடி
C) 6 மணி 7 நிமிடம் 12 நொடி
D) 5 மணி 4 நிமிடம் 12 நொடி

**விளக்கம் :** **விடை : (A)**

மீச்சிறு பொது மடங்கு காணவேண்டும்

| | |
|---|---|
| 2 | 48, 72, 108 |
| 2 | 24, 36, 54 |
| 3 | 12, 18, 27 |
| 3 | 4, 6, 9 |
| 2 | 4, 2, 3 |
| | 2, 1, 3 |

$2 \times 2 \times 3 \times 3 \times 2 \times 2 \times 3$
$= 432$ விநாடிகள்

60 ) 432 ( 7 நிமிடம்
420
12 நொடிகள்

அவை மூன்றும் 8 மணி 7 நிமிடம் 12 நொடிகளில் சந்திக்கும்.

10. 6, 8, மற்றும் 9–ஆல் மீதியின்றி வகுபடக்கூடிய 200–க்கும் 300–க்கும் இடைப்பட்ட எண்கள் யாவை ?

A) 221, 293  B) 220, 280
C) 230, 278  D) 216, 288

**விளக்கம் :** **விடை : (D)**

6, 8, 9 –இன் மீச்சிறு பொது மடங்கு 72

200–க்கும் 300–க்கும் இடையில் 72–இன் பெருக்கல் பலன்கள்

$72 \times 3 = 216$ ; $72 \times 4 = 288$

11. இரு வெவ்வேறு எண்களின் சரியான தொடர்பைக் காண்க.

A) மீப்பெரு பொ.வ. = மீச்சிறு பொ.ம.
B) மீப்பெரு பொ.வ. ≤ மீச்சிறு பொ.ம.
C) மீப்பெரு பொ.ம. ≤ மீச்சிறு பொ.வ.
D) மீப்பெரு பொ.ம. > மீச்சிறு பொ.வ.

**விளக்கம் :** **விடை : (D)**

இரு எண்களின் மீ.பொ.ம. அவற்றின் மீ.பொ.வ. வை விட அதிகமாகவே இருக்கும்.

(எ.கா.)

12 மற்றும் 18–இன் மீ.பொ.வ. = 6

12 மற்றும் 18–இன் மீ.பொ.ம. = 36

36 > 6

| | |
|---|---|
| 2 | 12, 18 |
| 2 | 6, 9 |
| 3 | 3, 9 |
| | 1, 3 |

$2 \times 2 \times 3 \times 3 = 36$

12. 78, 39 ஆகியவற்றின் மீச்சிறு பொ.ம. 78 எனில், மீப்பெரு பொ.வ. காண்க.

A) 33  B) 35
C) 37  D) 39

**விளக்கம் :** **விடை : (D)**

இரு எண்களின் பெருக்கற்பலன் } = அவற்றின் மீ.பொ.ம. × மீ.பொ.வ.

$78 \times 39 = 78 \times$ மீ.பொ.வ.

∴ மீ.பொ.வ. $= \frac{78 \times 39}{78} = 39$

13. இரு எண்களின் மீப்பெரு.பொ.வ.2 மற்றும் மீச்சிறு பொ.ம 28. ஒரு எண் 4 எனில், மற்றொரு எண் என்ன ?

A) 10  B) 12
C) 14  D) 16

**விளக்கம் :** **விடை : (C)**

இரு எண்களின் பெருக்கற்பலன் } = அவற்றின் மீ.பொ.ம. × மீ.பொ.வ.

மற்றொரு எண் $= \frac{\text{மீ.பொ.வ.} \times \text{மீ.பொ.ம.}}{\text{ஒரு எண்}} = \frac{2 \times 28}{4} = \frac{56}{4} = 14$

14. 36 மற்றும் 54 என்ற எண்களின் மீப்பெரு. பொ.வ. 18 எனில், அவ்வெண்களின் மீச்சிறு பொ.ம. வைக் காண்க.

A) 96  B) 108
C) 114  D) 120

**விளக்கம் :** **விடை : (B)**

மீ.பொ.ம $= \frac{36 \times 54}{18} = 108$

15. $\frac{2}{3}, \frac{3}{5}, \frac{4}{7}, \frac{9}{13}$ –இன் மீச்சிறு பொது மடங்கைக் காண்க.

A) 36  B) $\frac{1}{36}$
C) $\frac{1}{1365}$  D) $\frac{12}{455}$

**விளக்கம் :** **விடை : (A)**

மீச்சிறு பொ.ம. $= \frac{\text{மீச்சிறு பொது.ம} - 2, 3, 4, 9}{\text{மீப்பெரு பொ.வ} - 3, 5, 7, 13} = \frac{36}{1}$

3, 5, 7, 13 - பகா எண்கள். எனவே அதன் மீ.பொ.வ. = 1

16. $\frac{2}{3}, \frac{8}{9}, \frac{64}{81}, \frac{10}{27}$ –இன் மீப்பெரு பொது வகுத்தியைக் காண்க.

A) $\frac{2}{3}$  B) $\frac{2}{81}$
C) $\frac{160}{3}$  D) $\frac{160}{81}$

**விளக்கம் :** **விடை : (B)**

மீப்பெரு பொது வகுத்தி $= \frac{\text{மீப்பெரு பொ.வ} - 2, 8, 64, 10}{\text{மீச்சிறு பொது.ம} - 3, 9, 81, 27}$

$= \frac{2}{81}$

www.surabooks.com



Click Here to Learn more : https://bit.ly/3Bh1AVg

Click Here to Learn more : https://bit.ly/3Bh1AVg



**17.** **இரண்டு எண்களின் விகிதம் 3:4 அவற்றின் மீப்பெரு பொது வகுத்தி 4 எனில், அவற்றின் மீச்சிறு பொது மடங்கு**

**A)** 12 **B)** 16
**C)** 24 **D)** 48

**விளக்கம் :** **விடை : (D)**

அந்த எண்கள் $3x$ மற்றும் $4x$ என்க.
மீப்பெரு பொது வகுத்தி $= x \Rightarrow x = 4$
அந்த எண்கள் $3 \times 4 = 12$ மற்றும் $4 \times 4 = 16$
12 மற்றும் 16–இன் மீச்சிறு பொது மடங்கு 48

**18.** **நான்கு மணிகள் முறையே 6, 7, 8 மற்றும் 9 விநாடிகள் இடைவெளியில் ஒலிக்கின்றன. எனில், 2 மணி நேரத்தில் அவை நான்கும் எத்தனை தடவை ஒன்றாக ஒலிக்கும் ?**

**A)** 12 தடவைகள் **B)** 14 தடவைகள்
**C)** 16 தடவைகள் **D)** 18 தடவைகள்

**விளக்கம் :** **விடை : (B)**

6, 7, 8, 9 –இன் மீச்சிறு பொது மடங்கு = 504

$$\Rightarrow \frac{2 \times 60 \times 60}{504} = 14 \text{ தடவைகள்}$$

2 மணி நேரத்தில் அவை 14 தடவைகள் ஒன்றாக ஒலிக்கும்.

**19.** **மூன்று மணிகள் 36, 45, 48 விநாடிகள் இடைவெளியில் ஒலிக்கின்றன. அவை மூன்றும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் அடிக்கத் துவங்கினால் மீண்டும் எவ்வளவு நேரம் கழித்து ஒலிக்கும் ?**

**A)** 10 நிமிடங்கள் **B)** 12 நிமிடங்கள்
**C)** 14 நிமிடங்கள் **D)** 16 நிமிடங்கள்

**விளக்கம் :** **விடை : (B)**

| | |
|---|---|
| 2 | 36, 45, 48 |
| 2 | 18, 45, 24 |
| 2 | 9, 45, 12 |
| 2 | 9, 45, 6 |
| 3 | 9, 45, 3 |
| 3 | 3, 15, 1 |
| | 1, 5, 1 |

36, 45, 48, –இன் மீச்சிறு பொது மடங்கு

$\Rightarrow$ 720 நொடிகள்

$\frac{720}{60}$ = 12 நிமிடங்கள்

$2 \times 2 \times 2 \times 2 \times 3 \times 3 \times 5 = 720$

**20.** **ஒரு முக்ககோண நிலத்தின் பக்கங்கள் முறையே 160 மீ, 180 மீ, 200 மீ. அந்த நிலத்தின் மூன்று பக்கங்களையும் துல்லியமாக அளக்கக்கூடிய மிகப்பெரிய அளவுநாடாவின் அளவு**

**A)** 20 மீ **B)** 25 மீ
**C)** 16 மீ **D)** 10 மீ

**விளக்கம் :** **விடை : (A)**

மிகப் பெரிய அளவு எனில்,
மீப்பெரு பொது வகுத்தியைக் காணவேண்டும்.

| | |
|---|---|
| 5 | 160, 180, 200 |
| 4 | 32, 36, 40 |
| | 8, 9, 10 |

மீப்பெரு பொது வகுத்தி $= 5 \times 4 = 20$

**21.** **12, 15, 20 மற்றும் 35 ஆகிய எண்களால் வகுபடக்கூடிய மிகப் பெரிய 4 இலக்க எண் எது ?**

**A)** 9998 **B)** 9990
**C)** 9660 **D)** 9550

**விளக்கம் :** **விடை : (C)**

12, 15, 20 மற்றும் 35 ஆகியவற்றின் மீச்சிறு பொது மடங்கு 420

420) 9999 (23
9660
339

| | |
|---|---|
| 2 | 12, 15, 20, 35 |
| 2 | 6, 15, 10, 35 |
| 3 | 3, 15, 5, 35 |
| 5 | 1, 5, 5, 35 |
| | 1, 1, 1, 7 |

$2 \times 2 \times 3 \times 5 \times 7 = 420$

தேவையான எண் $= 9999 - 339 = 9660$

**22.** **60, 75 மற்றும் 90 ஆகிய எண்களின் மீப்பெரு பொது வகுத்திக்கும் மீச்சிறு பொது மடங்கிற்கும் உள்ள வேறுபாடு என்ன ?**

**A)** 895 **B)** 899
**C)** 845 **D)** 885

**விளக்கம் :** **விடை : (D)**

60, 75 மற்றும் 90 ஆகியவற்றின் மீச்சிறு பொது மடங்கு = 900
60, 75 மற்றும் 90 ஆகியவற்றின் மீப்பெரு பொது வகுத்தி = 15
வேறுபாடு $= 900 - 15 = 885$

**23.** **இரு எண்களின் மீப்பெருபொது வகுத்தி மற்றும் மீச்சிறு பொது மடங்கு முறையே 16 மற்றும் 240 அவற்றில் ஒரு எண் 48 எனில், மற்றொரு எண் என்ன ?**

**A)** 60 **B)** 80
**C)** 40 **D)** 24

**விளக்கம் :** **விடை : (B)**

மற்றொரு எண்

$$\Rightarrow \frac{\text{மீப்பெரு பொ.வ} \times \text{மீச்சிறு பொ.ம}}{\text{ஒரு எண்}} \Rightarrow \frac{16 \times 240}{48} = 80$$

**24.** **$4^5$, $4^8$, $4^{12}$ மற்றும் $4^7$ ஆகியவற்றின் மீச்சிறு பொதுமடங்கைக் காண்க.**

**A)** $4^5$ **B)** $4^8$
**C)** $4^{12}$ **D)** $4^7$

**விளக்கம் :** **விடை : (C)**

கொடுக்கப்பட்ட எண்களின் அடிமானம் சமம் = 4
அவற்றின் அடுக்குகள் மட்டுமே வித்தியாசமாக உள்ளன. எனவே அவற்றின் மீச்சிறு பொதுமடங்கு அதிகபட்ச அடுக்கான $4^{12}$ ஆகும்.

**25.** **36, 48 மற்றும் 64 ஆகிய எண்களால் வகுப்பட்டால் 25, 37 மற்றும் 53 மீதிகளைக் கொடுக்கக் கூடிய மிகச் சிறிய எண் எது ?**

**A)** 540 **B)** 555
**C)** 560 **D)** 565

**விளக்கம் :** **விடை : (D)**

$(36 - 25) = (48 - 37) = (64 - 53) = 11$
$36 - 25 = 11$ ; $48 - 37 = 11$ ; $64 - 53 = 11$
தேவையான எண் = 36, 48 மற்றும் 64 –இன் மீச்சிறு பொது மடங்கு – 11

| | |
|---|---|
| 2 | 36, 48, 64 |
| 2 | 18, 24, 32 |
| 2 | 9, 12, 16 |
| 2 | 9, 6, 8 |
| 2 | 9, 3, 4 |
| 2 | 9, 3, 2 |
| 3 | 9, 3, 1 |
| | 3, 1, 1 |

$2 \times 2 \times 2 \times 2 \times 2 \times 2 \times 3 \times 3 = 576$
$\Rightarrow 576 - 11 = 565$



Click Here to Learn more : https://bit.ly/3Bh1AVg

Click Here to Learn more : https://bit.ly/3Bh1AVg



# 2 விகிதம், விகித சமம், நேர் விகிதம் (Ratio, Proportion and Direct Variation)

1. **ஒரு பேனாவின் விலை ₹ 8. ஒரு பென்சிலின் விலை ₹ 2.50 எனில், பேனாவின் விலைக்கும் பென்சிலின் விலைக்கும் உள்ள விகிதம் காண்க.**
   A) 16 : 5 B) 5 : 16
   C) 14 : 7 D) 7 : 14

**விளக்கம் :** **விடை : (A)**

ஒரு பேனாவின் விலை = ₹ 8.00
$\Rightarrow$ 8 × 100 = 800 காசுகள்
ஒரு பென்சிலின் விலை = ₹ 2.50
$\Rightarrow$ 2.50 × 100 = 250 காசுகள்
விகித வடிவம் = 800 : 250 = 16 : 5

2. **ஒரு கிராமத்தில் உள்ள 10,000 பேரில் 4000 பேர் அரசுப் பணியில் உள்ளனர். மீதி உள்ளவர்கள் சுயதொழில் புரிகிறார்கள் எனில், அரசுப்பணியில் உள்ளவர்களுக்கும் சுயதொழில் புரிபவர்களுக்கும் உள்ள விகிதங்களைக் காண்க.**
   A) 2 : 5 B) 3 : 5
   C) 2 : 3 D) 5 : 3

**விளக்கம் :** **விடை : (C)**

கிராமத்தில் உள்ளவர்களின் எண்ணிக்கை = 10,000 பேர்
அரசுப் பணியில் உள்ளவர்களின் எண்ணிக்கை = 4,000 பேர்
∴ சுய தொழில் புரிபவர்கள் = 10000 – 4000 = 6000 பேர்
விகிதம் = 4000 : 6000 = 2 : 3

3. **சீமாவின் மாதச் சம்பளம் ₹ 20,000 சேமிப்பு ₹ 500. மீதித் தொகையை செலவு செய்கிறார் எனில், சேமிப்பிற்கும் செலவிற்கும் உள்ள விகிதம் காண்க.**
   A) 40 : 1 B) 40 : 39
   C) 1 : 39 D) 39 : 1

**விளக்கம் :** **விடை : (C)**

மாதச்சம்பளம் = ₹ 20,000 ; சேமிப்பு = ₹ 500
செலவு = 20,000 – 500 = ₹ 19,500
விகிதம் = 500 : 19,500 = 1 : 39

4. **₹ 280–ஐ 3 : 5 என்ற விகிதத்தில் பிரிக்கவும்.**
   A) ₹ 105, ₹ 175 B) ₹ 175, ₹ 105
   C) ₹ 150, ₹ 130 D) ₹ 125, ₹ 155

**விளக்கம் :** **விடை : (A)**

மொத்த பங்குகள் = 3 + 5 = 8 ; 8 பங்குகள் = ₹ 280
∴1 பங்கு = $\frac{280}{8}$ = 35
முதல் பகுதி = 3 × 35 = ₹ 105
இரண்டாம் பகுதி = 5 × 35 = ₹ 175

5. **ஒரு செவ்வகத்தின் நீள அகலங்களின் விகிதம் 4 : 7 அகலம் 77 செ.மீ. எனில், அதன் நீளத்தைக் கணக்கிடுக.**
   A) 42 செ.மீ. B) 44 செ.மீ.
   C) 48 செ.மீ. D) 52 செ.மீ.

**விளக்கம் :** **விடை : (B)**

செவ்வகத்தின் அகலம் = 77 செ.மீ.
7 பங்குகள் = 77 செ.மீ.
∴ 1 பங்கு = $\frac{77}{7}$ = 11 செ.மீ.
செவ்வகத்தின் நீளம் 4 பங்கு $\Rightarrow$ 4 × 11 = 44 செ.மீ.

6. **1,21,000 பேர் உள்ள ஒரு கிராமத்தில் ஆண்களும் பெண்களும் 6:5 என்ற விகிதத்தில் உள்ளனர் எனில், பெண்கள் எத்தனை பேர் ?**
   A) 52,000 B) 53,000
   C) 54,000 D) 55,000

**விளக்கம் :** **விடை : (D)**

விகித எண்களின் கூடுதல் = 6 + 5 = 11
11 பங்குகள் = 1,21,000
∴ 1 பங்கு = $\frac{1,21,000}{11}$ = 11,000
கிராமத்தில் உள்ள பெண்களின் எண்ணிக்கை
$\Rightarrow$ 5× 11,000 = 55,000 பேர்

7. **ரகீம் மற்றும் பஷீர் ஆகியோர் இரு போட்டியில் பெற்ற பரிசுத் தொகையை 7:8 என்ற விகிதத்தில் பிரித்துக் கொள்கின்றனர். பரிசுத் தொகை ₹ 7,500 எனில், பஷீர் பெற்ற தொகை எவ்வளவு ?**
   A) ₹ 4000 B) ₹ 3500
   C) ₹ 4500 D) ₹ 3000

**விளக்கம் :** **விடை : (A)**

விகிதங்களின் கூடுதல் = 7 + 8 = 15
15 பங்குகள் = ₹ 7500
∴ 1 பங்கு = $\frac{7500}{15}$ = 500
பஷீர் பெற்ற தொகை = 8 × 500 = ₹ 4000

8. **சபனா என்பவர் 2 மணி நேரத்தில் 35 கி.மீ. தூரம் கடக்கிறார் எனில், அதே வேகத்தில் சென்றால் 6 மணி நேரத்தில் எவ்வளவு தூரம் கடந்திருப்பார் ?**
   A) 105 கி.மீ. B) 115 கி.மீ.
   C) 125 கி.மீ. D) 130 கி.மீ.

**விளக்கம் :** **விடை : (A)**

2 : 6 = 35 : $x$; ∴ $x = \frac{6 \times 35}{2}$ = 105 கி.மீ.

9. **12 மாணவர்களுக்கு சீருடை வழங்க ₹ 3000 செலவாகும் எனில், ₹ 1250–க்கு எத்தனை மாணவர்களுக்கு சீருடை வழங்கலாம் ?**
   A) 6 B) 5
   C) 4 D) 3



Click Here to Learn more : https://bit.ly/3Bh1AVg